

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2025) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் நிர்வாகிகளுடன் சந்தித்து பேசி, கோரிக்கை மனு அளித்தார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2025) முகாம் அலுவலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து செயல்பட

# ரூ.2 கோடி நிதி வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழுத் தலைவர் ப.சிதம்பரம் – தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் ம.இராசேந்திரன் அறிக்கை!





சென்னை, ஏப்.18-

**தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து செயல்பட இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழுத் தலைவரும் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் எம்.பி., தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவரும் அறங்காவல் குழு செயலாளரும் தஞ்சைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தருமான ம.இராசேந்திரன் ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் இவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

"செயற்கை நுண்ணறிவுக் காலத்திற்கேற்பத் தமிழ் மொழியை வளர்த்தெடுக்கத் தேவைப்படும் தமிழ்த் தரவகம் உருவாக்கவும் சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் போன்ற திட்டப்பணிகளைத் தமிழ் வளர்ச்சிக்கழகம் மேற்கொள்ளவும் தொடர்ந்து தொய்வின்றிச் செயற்பட உதவும் வகையில் வைப்புத் தொகையாக ரூபாய் 2 கோடி வழங்கப்படும்." என்று சட்டமன்றத்தில் அறிவிக்கச் செய்து தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குப் புத்துயிர் வழங்கியிருக்கும் முதல்வர் அவர்களுக்கு நன்றி.

'கலைக்களஞ்சியம்' என்ற அரிய செல்வத்தைத் தமிழில் உருவாக்கி, எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழி தழைத்து ஓங்குவதற்கு வழிகாட்டிய பெருமைக்குரியது தமிழ் வளர்ச்சிக் கழகம். 'கலைக்களஞ்சியம்' என்ற பொருள் பொதிந்த சொல்லைத் தமிழகத்திற்கு வழங்கிய பெருமையும் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கே உரியதாகும். இப்பொழுது "Encyclopaedia" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான புத்தாக்கச் சொல்லாகத் தமிழறிஞர் அனைவராலும் "கலைக் களஞ்சியம்" என்ற சொல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இச்சொல் தமிழ் வழக்கிலும் வேரூன்றி நிலைத்துவிட்டது.

**கலைக்களஞ்சியம் உருவாக்கிய பெருமை!**

இந்திய மொழிகளிலேயே முதன்முதலில் கலைக்களஞ்சியம் உருவாக்கிய பெருமையைத் தமிழுக்கு ஈட்டித் தந்த சிறப்பு தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கே உண்டு. தமிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கியவர் அப்போது சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக (1946 1949) இருந்த தி.சு.அவினாசிலிங்கம். இவர்தான் தமிழ் வழிக் கல்வியை அறிமுகம் செய்தவர்.

தற்போது தமிழ் வளர்ச்சிக் கழக அறக்கட்டளைக்குத் தலைவராக மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்கள் இருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பாகவே 1946 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டிருக்கிறது தமிழ் வளர்ச்சிக்கழகம். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உயரிய குறிக்கோளாகிய கலைக்களஞ்சியத் திட்டத்தைத் தி.சு.அவினாசிலிங்கம் அவர்கள் இந்திய விடுதலை நாளான 15.08.1947 அன்று அறிவித்திருக்கிறார்கள். அப்போதைய ஒன்றிய நிதியமைச்சர் திரு ஆர்.கே. சண்முகம், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ.இலட்சுமனசாமி, வடபாதி மங்கலம் வி.எஸ். தியாகராஜன், டி.கே. சிதம்பரநாதன், மீ.ப.சோமு, கல்கி ஆகியோர் துணையுடன், பெரியசாமித் தூரனைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இம் மாபெரும் பணியைத் தொடங்கியிருக்கிறார்.

**ஜவஹர்லால் நேரு வெளியிட்ட கலைக்களஞ்சியம்!**

1954 இல் முதல் தொகுதியையும் 1968 இல் 10 வது தொகுதியையும் வெளியிட்டிருக்கிறது. இதற்கு 207 அறிஞர்கள், கட்டுரைகள் வழங்கியுள்ளனர்; 2240 அறிஞர்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். 10 தொகுதிகளும் ஏறத்தாழ 7500 பக்கங்களில் வெளிவந்துள்ளன. கலைக்களஞ்சியத்தின் ஐந்தாவது தொகுதியை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

மேலும் குழந்தைகள் கலைக்களஞ்சியம், மருத்துவக் களஞ்சியம், சித்த மருத்துவக் களஞ்சியம் என்று 60க்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ளது. பொதுமக்களுக்கும் விளங்கக்கூடிய நடையில், அறிவுத் துறைகள் அனைத்தையும் திறம்பட எடுத்துரைப்பதாகவும், பல்துறை அறிவு பற்றிய பதிவுகளை அகரவரிசைப் படுத்தி, அவைகளைக் கட்டுரை வடிவில் தெளிவாக விளக்குவதாகவும் தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடுகள் உள்ளன.

**தி.சு.அவினாசிலிங்கம் எழுதியுள்ள முகவுரை!**

தமிழ் வளர்ச்சிக் கழகம் 20 121948 இல் வெளியிட்ட கலைக் களஞ்சிய மாதிரிப் படிவத்திற்குத் திரு. தி.சு. அவினாசிலிங்கம் எழுதியுள்ள முகவுரையில், "ஆங்கிலத்தில் பல பெரிய கலைக் களஞ்சியங்கள் (Encyclopaedia) இருக்கின்றன. மக்களுடைய அறிவை வளர்ப்பதற்கு அவை பெரிதும் பயன்படுகின்றன. அவை போன்ற புத்தகங்கள் தமிழில் இல்லாதது ஒரு பெருங்குறையாகும். நமது நாட்டின் சாதாரண மக்களின் அறிவு உயர வேண்டுமானால் இத்தகைய நூல்கள் நமது மொழியில் வெளிவருவது அவசியம்." என்று குறிப்பிட்டிருக்கிறார்,

தமிழ் வளர்ச்சித்துறை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அகர முதலித் திட்டம், தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கான துறைகளும் நிறுவனங்களும் தொடங்குவதற்கு ஊற்றுக் கண்ணாக விளங்கியிருக்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம். கலைக் களஞ்சியத் திட்டத்திற்கு நிதி உதவி வேண்டி 1947 இல் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் அவருடைய இந்த அறிவிப்பை வரவேற்றுத் தாமே மனமுவந்து நிதி வழங்கியிருக்கின்றனர்.

கலைக்களஞ்சியத்தின் திருந்திய இரண்டாம் பதிப்பை, ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்களைக் கொண்டதாய், 12 தொகுதிகளில் வெளிக்கொணரப் பெரிதும் விரும்பியிருக்கிறார் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள். அதற்காக 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதற்குரிய திட்டமும் தயாரிக்கப்பட்டு, தொடக்க விழாவும் நடந்திருக்கிறது. பல்வேறு காரணங்களால் அத்திட்டம் நிறைவேறாமற் போயிருக்கிறது. கலைக் களஞ்சியத்தின் திருந்திய இரண்டாம் பதிப்பு வெளிவந்திருந்தால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் மேலும் பயன்படத்தக்கதாய் அமைந்திருக்கும்.

**வணிக நோக்கு இல்லாத தமிழ் வளர்ச்சிக் கழகம்!**

தமிழ் வளர்ச்சிக் கழகம் வணிக நோக்கு இல்லாதது; தமிழ் வளர்ச்சி ஒன்றையே நோக்காகக் கொண்டு இயங்குவது. தற்போது மாணவர் அகராதி, தமிழியல் களஞ்சியம், தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியம், சொல் புதிது, கலைக்களஞ்சியம் திருந்திய, மேம்படுத்திய பதிப்புத் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்ளத் தமிழ் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டிருக்கிறது.

இப்படித் தற்காலத் தேவைக்கேற்பத் தொய்வின்றித் தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர ஏதுவாகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு வைப்புத் தொகையாக இரண்டு கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டிருக்கிற முதல்வர் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சிக்கழகமும் அறக்கட்டளையும் தமது தமிழ்ப் பணிகளால் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன. உற்றுழி உதவி, ஊக்கம் தரும் நிதியமைச்சர் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கோரிக்கையை உள்ளன்போடு கருதிப் பார்த்து ஆதரவு காட்டியிருக்கும் நிதிச் செயலாளருக்கும் தமிழ் வளர்ச்சிச் செயலாளருக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகமும் அறக்கட்டளையும் மனதார நன்றி சொல்வதில் பெருமை கொள்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



தருமபுரி கிழக்கு மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடத்துவது மற்றும் இளைஞர் அணி பணிகள் குறித்து தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி தலைமையில் தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்.அசோக்குமார், கே.ஆர்.சி.செல்வராஜ், பி.ராஜகோபால், என்.எஸ்.கலைச்செல்வன், கார்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

